1978 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இல்லை.

திரு. ரா க. சு. தண்டபாணி : தலைவரவர்களே, இந்தக் கேள்வி பரம்பிக்குளம்-ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டம் சம்பந்தப்பட்ட கேள்வி என்று நினைக்கிறேன். இந்தத் திட்டம் பற்றி பட்ஜெட்டில் கூறப்பட்டிருந்தாலும் திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதையும், எவ்வளவு பணம் இத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புவதுடன், இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்பாகச் சில * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * * என்பதை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு ஆணையிடுகிறேன்.

திரு. ரா. க.சு. தண்டபாணி: இந்தத் திட்டத்திற்குக் குறுக்கே நின்றவர்களை எல்லாம் எப்படி அமைச்சரவர்கள் நீக்கினார்கள் என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டம் இந்த ஆண்டு கூடிய சீக்கிரத்திலே எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. ஏற்கனவே 2,50,000 ஏக்கர் பாசன வசதியிலே இருந்து கொண்டிருக்கிறது. மேலும் 1,15,000 ஏக்கர் விஸ்தரிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. அந்த வேலைக்காக இந்த ஆண்டில் ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டு அந்த வேலைகள் இன்னும் ஓரிரு மாதங்களிலே தொடங்கப்பட இருக்கிறது.

இந்த விஸ்தரிப்புத் திட்டத்தைக் கூடாது என்று பலபேர் எதிர்த்தாலும் புரட்சித் தலைவருடைய புனித ஆட்சியிலே எல்லோருக்கும் பாசன வசதியை விஸ்தரிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு நாம் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிளவக்கல் அணைப்பகுதியில் விதைப் பண்ணை.

*வினா எண் 147—திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் பிளவக்கல் அணைக்கட்டுப் பகுதியில் உள்ள 600 ஏக்கர் புல்வெளிக் காட்டில் அரசு விதைப் பண்ணை துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இல்லை.

---

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1978 செப்டம்பர் 11

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, இந்த விதைப் பண்ணை வருவதால் அரசுக்கு வருவாயும் அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பும் இருப்பதாலே இந்தத் திட்டத்தை மேற்கொண்டு அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். தமிழ் நாட்டில் விதைப் பண்ணைகள் எங்கெங்கே இருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே திருவில்லிப்புத்தூர் தொகுதியிலே பிளவக்கல் அணைக்கட்டு பகுதியில் தற்பொழுது எந்தவிதமான அரசு விதைப் பண்ணையும் ஏற்படுத்துவதாக வேளாண்மைத் துறையின் செயற்குறிப்பிலே இல்லை. ஆனாலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லக் கூடிய யோசனையை ஏற்றுக் கொண்டு அது பரிசீலனையிலே எடுத்துக் கொள்ளப்படும். தமிழகத்திலே 49 இடங்களிலே அரசு விதைப் பண்ணைகள் இருக்கின்றன. அந்த விதைப் பண்ணைகள் மூலமாக, நெல் போன்ற பயிர்களுக்கான விதைகளையெல்லாம் கொடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, திருவில்லிப்புத்தூர் பகுதியிலே தேவதானத்தில் விதைப் பண்ணை இருக்கிறது. அது முறையாக இயங்காமல் இருக்கிறது. அவ் விதைப்பண்ணை முறையாகச் செயல்பட, சரியாகச் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும்.

தமிழ்நாடு வக்பு போர்டு.

*வினா எண் 148—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு வக்பு போர்டு திருத்தி அமைக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

(இ) அதன் உறுப்பினர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ),(ஆ),(இ) 1976-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நியமிக்கப்பட்ட தமிழ் நாடு வக்ஃபு வாரிய உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் பதவிகளை இராஜினமா செய்து விட்டதால் அவர்களுக்குப் பதிலாக 11 உறுப்பினர்களை அரசு நியமித்துள்ளது.